T-UN-540

தமிழ் வாழ்க.

துணர் ௪௨. மலர் ௫.

COLLECTOR'S OFFICE
26 MAR 1969
THANJAVUR

தமிழ்ப் பொழில்

கீலக — மாசி

(1969 — பிப்ரவரி - மார்ச்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. செ. தனக்கோடி, பி. ஏ., பொழிற்றொண்டர்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
2. திரு. கு. பாலகிருட்டினன், எம்.ஏ., எல்.டி., செயலாளர்.
3. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.
4. சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை
5. திரு. வித்துவான். க. வெள்ளைவாரணனார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
6. திரு. வித்துவான். தி. அடிகளாசிரியர், பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.
7. திரு. வித்துவான். ச. பாலசுந்தரம், பேராசிரியர், ,,
8. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன், பேராசிரியர், ,,

உள்ளுறை.

துணர் சஉ — மலர் ரு

		பக்கம்
1.	தமிழ் நாடு — பொழிற்றொண்டர்	97
2.	தமிழகம் பெற்ற பெயர் பேராசிரியர், திரு. அ. கிருட்டினமூர்த்தி எம். ஏ., பி. எல்., பி. ஓ. எல்., (ஆனர்சு)	99
3.	பண்டைத் தமிழரின் எழுத்துக் கலை பேராசிரியர், திரு. சி. கோவிந்தராசனார்	105
4.	பழந்தமிழகத்தில் வீரம் வலியுறுத்தப்பட்டது ஏன் ? திரு. சாலை இளந்திரையன், எம். ஏ., எம். லிட்.,	112
5.	எது கவிதை ? திரு. வித்துவான், சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.,	119
6.	வள்ளுவர் காட்டும் சொல்-அணி திரு. வித்துவான், ஆ. பாலன், தமிழாசிரியர்	126

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௯	மலர்
சஉ	கீலக, மாசி 1969–பிப்ரவரி-மார்ச்	ரு

தமிழ் நாடு

......

தமிழ் மக்கள் வாழும் இந்நாட்டினை அண்மையில் தமிழ் நாடு என்றழைக்கப் பெற்றதற்குள்ள உரிமை, சிறப்பு, சாதனைகள் முதலியனவற்றை விளக்க சில கட்டுரைகள் இவ் விதழில் வெளியிடப்பெறுகின்றன. பேராசிரியர் அ. கிருட்டின மூர்த்தி அவர்கள் "தமிழகம் பெற்ற பெயர்" என்ற கட்டுரை யில் தமிழகம் தமிழ்நாடு என்ற பெயர் பெற்ற வரலாற்றை ஆய்ந்து விரிவாக எழுதியுள்ளார்கள். பாரம்பரியம், வரலாறு பண்பாடு, உலக நியாயம், இலக்கிய மரபு, சமுதாய மேன்மை, அரசமைப்பு, தத்துவ சிந்தனை இவைகளின் அடிப்படையில் தமிழ்நாடு என்ற பெயர் தோன்றி, பின்னர் மறைந்து, மீண்டும் இப்போது தனக்குரிய பெயரைப் பெற்றதென்பதை தெளிவாகக் கூறியுள்ளார்கள். தமிழ்நாடு என்ற பெயர் வரப் பெற்றதனால் ஏதேனும் சாதனைகள் உண்டாவென்ற ஐயப் பாடு இருப்பின் அதையும் நீக்கி இதனாலான பயன்களையெல் லாம் நன்கு புலப்படுத்தியுள்ளார்கள். பேராசிரியர் கோவிந்த ராசனார் தமிழ்நாடு தொன்மையானது, தமிழ் மக்கள் நாகரிக மேம்பாடுடையவர்கள், மொழித்திறம் பெற்றவர்கள், திறமான எழுத்துக்கலை யுடையவர்களென்பதை யெல்லாம் தன் கட் டுரையில் விரித்துக் கூறியுள்ளார்கள்.

கடந்த சில நூற்றாண்டுகளில் பல வேற்றரசர்கள் இத் தமிழ்நாட்டைக் கைப்பற்றி ஆண்டு வந்தமையால் அவரவர் களின் மொழிகளும் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றன. எனவே பிற மொழிச் சொற்கள் விரவவும் தமிழ்ச்சொற்கள் பல மறையவும் நேர்ந்தன. தமிழ் மக்களின் நடை, உடை,

பண்பாடுகளும் ஓரளவுக்கு அரசை ஒட்டி மாறுபட்டன. இச் சூழ்நிலையில் தமிழ்நாடு தனக்குரிய பெயரை இழந்து நின்றது. இதுபோழ்து தனக்குரிய பெயராகிய தமிழ்நாடு என்பதை மீண்டும் பெற்றது, தமிழ் மக்கள் பெருமகிழ்ச்சி யடைவதற் குரியதாகும். தமிழ்நாடு என்ற பெயரை சட்டமூலமாகவும், உலக வழக்கிலும் வரச்செய்த முயற்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட தமிழன்பர்களுக்கெல்லாம் நம் நன்றி உரித்தாகுக.

பொழிற்றொண்டர்

தமிழுக் கமுதென்று பேர்!

புலவர், துரை-பிச்சை

அமிழ்த மெனினும் விருந்திருக்கத் தாமே
தமியரா யுண்ணுந் தகைமை — தமிழர்
தமக்கில்லை யென்னுங் குறணெறியைக் கொண்ட
தமிழுக் கமுதென்று பேர்.

தென்புலத்தார் வாழ்வியலைத் தெள்ளிதின் காட்டியென்றும்
நின்றிலங்குஞ் சங்கநெடு நூற்கெல்லா — மின்பை
உமிழ்ந்தே யுரைபகன்ற வுச்சிமேற்கொள் நச்சர்
தமிழுக் கமுதென்று பேர்.

சான்ற விலக்கணத்தான் செப்பு வரைமுறையான்
கான்றிடு சொற்பொருளின் வேறுபாடு — தோன்ற
இமிழ்க்கு மமைப்பா னுயிரோம்பு மேன்மைத்
தமிழுக் கமுதென்று பேர்.

செய்ந்நிலத்தை ஐவகையான் செப்பி யிலங்குபொருள்
பெய்தமுறை தன்னை முதற்கருவென் — றெய்தி
நிமித்த வுரியென்னு மொண்பொருளுங் கொண்ட
தமிழுக் கமுதென்று பேர்.

யாதுமூரே யாவருங் கேளிரொன்றே நற்குலமும்
ஓதுமிறை தானுமொன்றே ஓர்கவென்னும் — நீதி
கமழும் நெறிமுறையைக் காசினுக்குக் காட்டு
தமிழுக் கமுதென்று பேர்.

வையைப் புதுமணலில் வண்புலவோர் வந்தமர்ந்து
பையப் புதிதுண்டு பைந்தமிழ்நூல் — வையங்
கமழ்ந்திடவே யாத்தமையான் காலத்தை வெல்லுந்
தமிழுக் கமுதென்று பேர்.

தமிழகம் பெற்ற பெயர்

பேராசிரியர். **அ. கிருட்டினமூர்த்தி** *எம்.ஏ., பி.எல்., பி.ஓ.எல்.* (ஆளர்சு)

தைத்திங்கள் முதல்நாள் முதலாகத் தமிழகம் 'தமிழ்நாடு' எனப் பெயர் மங்கலம் பெற்றது.

ஐக்கிய நாட்டு மன்றத்தில் இடம்பெற்றுள்ள உலக நாடுகள் எல்லாவற்றுள்ளும் பண்டைய நாகரிகம் படைத்த சில நாடுகளோடு தானும் ஒத்த பழைமையுடையதாய் — பல வற்றில் மூத்த பழைமையுடையதாய் விளங்கிய தமிழ்த் திரு நாடு, தன் பெயரையும்கூடப் பல நூற்றுண்டுகளாக இழந்து விட்டிருந்தது — மீண்டும் அதனை எட்டுத்திசையும் முழங்கப் பெற்றுவிட்டது. இன்று.

பல நூற்றுண்டுகளாக அரசமுற்றத்தில் வழங்காது மறைந்துகிடந்து, இந்நாள் இமயத்தின் சாரலில் அரச முத்திரை ஏறி, யமுனை என்னும் காளிந்தி நதிக்கரைக் காற் றிலே தவழ்ந்து, தமிழகத்திற்கு மீண்டும் வந்துவிட்டது, அத் திருப்பெயர்.

இப்பெயர் வழக்குப்பற்றிய சில குறிப்புக்கள் வருமாறு:—

சேர, சோழ, பாண்டியம் என்னும் மூவேந்தர் நாட்டுப் பெயர்களைவிடத் தமிழ், தமிழகம் என்பன தொன்மை மூத்த பழம்பெரும் பெயர்கள்

தென்னகம் முழுவதையும் பொதுமையில் ஒரே பெயராற் குறிக்கப் பண்டும் பண்டும் வழங்கி வந்த பெயர் தமிழகம் என்பது. இன்று வழங்கும் திராவிடம் என்பதன் தாய்ச் சொல் திரமிளம். தமிழகம் — திரமிளம் — திரவிடம் என மருவியது. திரமிளத்தின் தாய் தமிழகம்; இச்சொல்-விந்தி யத்தின் தென்பாலுள்ள எல்லாப்பகுதியையும் குறிப்பதாகும்.

சேர சோழ பாண்டியம் முதலாயின, அரசு வகையால் மூன்று நாடுகளாகவும், பிறவாறும் தமிழகத்தில் நாடுகள் பின்னர்ப் பின்னர்த் தோன்றியபோது — உண்டாகி வழங்கிய பெயர்கள்.

அதாவது அரசு முறையால் சேர சோழ பாண்டியம் எனப் பல பிரிவாகவும், பொது வகையால் மொழியது அடிப்

படையில் தமிழகம் எனப் பொதுப் பெயராகவும் பெற்று வழங்கி வந்தது.

தமிழகம், தமிழ் நாடு என்னும் இவற்றில் தமிழகம் என்னும் வழக்கு முந்தியது. தமிழ் நாடு என்பது அதனை யடுத்துப் பிந்தியது. தமிழகம் என்பது மொழிக்குறிப்பில் அமைந்தது. தமிழ் நாடு என்பது அரசுத் தொனிப்போடு அமைந்தது.

பதின்மூன்றும் நூற்றுண்டில் தமிழ் நாட்டு முடிமன்னர் மூவரும் அரசுரிமை இழந்த போது, அவர்களோடு இந்த நாட்டின் பெயரும் மறைந்து, வருவார் போவார் இட்டவை யெல்லாம் பெயராகி, கருநாடகம், மலபார், சென்னை, மெட்ராஸ், மதராஸ் என்றெல்லாம் பெயர்கள் வழங்கின.

ஆங்கிலேயர்கள் தமிழகம், மலையாளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய பல மண்டிலங்களையும், பகுதிகளையும் ஒன்றாய் இணைத்து, தங்கள் அரசாள் வசதிக்காக மெட்ராஸ் என வழங்கி வந்தனர்.

1956-இல் மொழிவழி அரசுகள் அமைந்தகாலை, தமிழகம் தனக்கென ஒரு தனி அரசமைப்பைப் பெற்றது. இருப்பினும் பெயர் 'மெட்ராஸ்' என்றே இருந்துவந்தது.

நாடுவாழ் மாந்தர் இதனை விரும்பவில்லை. "இதற்குரிய பெயர் 'தமிழ்நாடு' என்பது; இதனைத் 'தமிழ்நாடு' என்றே அழைக்கவேண்டும்" என வேண்டினர்—விழைந்தனர்.

இதனைத் 'தமிழ்நாடு' என அழைக்கலாகாது என ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் தடைசெய்துகொண்டே வந்தார்கள். "தமிழ்நாடு" என்பது புதிதாய் ஏற்பட்ட பெயர்; பழைய இலக்கியங்களில் இப்படி ஒரு பெயர் வழங்கியதில்லை" "சேர சோழ பாண்டியம் எனப் பல நாடுகளாகத்தான் இருந்தது, ஒரு நாடாகப் பெயர் வழங்கியதில்லை" "தமிழ்நாடு" என்பதை வற்புறுத்துவது, நம் குறுகிய பிரதேச புத்தியைக்காட்டுவதாகும்" "இந்தியாவிலும் அப்பாலும் 'மெட்ராஸ்' என்றால்தான் தெரியும். தமிழ்நாடு என்றால் வெளிநாட்டார்க்குப் புரியாமல் திணறுவார்கள். எனவே மெட்ராஸ்தான் வழங்கவேண்டும்."

ஜெர்மன் தேசம் உள்நாட்டில் 'தோச்லாந்து' என்றும் வெளியுலகுக்கு 'ஜெர்மனி' என்றும் வழங்குவது போல,

நாமும் இங்குத் தமிழ்நாடு என்றும் வெளியுலகில் மெட்ராஸ் என்றும் வழங்கலாமே''

என்றெல்லாம் இன்னும் பலவாறுகவும் சொல்லித் தடை செய்துகொண்டே வந்தனர்.

பின்னர், தமிழில் 'தமிழ்நாடு' என்றும் ஆங்கிலத்தில் 'மெட்ராஸ்' என்றும் வழங்கலாம்-என ஓர் இணக்கம் ஏற்படுத்தி, அதற்குரிய விதிகளையும் வகுத்தனர்.

மேற்சொன்ன குழறுபடியான வாதங்களுக்கெல்லாம் இவற்றின் பின்னணியில் இருந்த போலிவாதங்களும் மனக் குழப்பங்களும் அறியாமையும் காரணங்களாகும்.

இந்த நாட்டின் மற்ற மண்டிலங்களில் பலவற்றுக்கு மொழியின் பெயரால் பெயரமையவில்லை. (உத்தரப்பிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் போல்வன) மண்டிலப் பெயர்கள் பல 'பிரதேசம்' எனப் பெயர் முடிபு பெற்றவை (ஆந்திரப் பிரதேசம். உத்தரப்பிரதேசம் முதலியன). இந்த இரு வகைப் பெயர்களுக்கும் மாறுகத் 'தமிழ்நாடு' என்பதில் 'தமிழ்' என மொழியின் பெயரும், 'நாடு' என அரசுரிமைபெற்ற தேயப்பெயரும் ஒருசேர நின்று 'தமிழ்நாடு' என ஒரு முழுத் தேயப் பெயராகவே பலருக்குத் தொனித்தது. மொழியின் அடிப்படையில் இங்கு நிலவிய உணர்ச்சி, அரசு வேட்கையில் தணியாத தாகம் ஆகியவற்றின் சூழலில், இந்தப் பெயரைத் தந்து 'தமிழ்நாடு' என அழைக்க—வழங்க—எதிர்ப்பாளர்கள் ஐயங்கொண்டனர், அஞ்சினுர்கள். இவையெல்லாம் வெளிப் படச் சொல்லாத கதைகள்.

–இவ்வாதங்களைக் கடந்தும், தன்பெயர் பெற்றது தமிழகம்.–

நன்று, வேங்கடம் குமரி என்னும் இவ் இருபேர் எல்லைக் குள், தமிழ் வழங்கும் நல்லோர் மலிந்த தண்புனல் நாடு தமிழகம் ஆகும். இது தமிழகத்தின் பாரம்பரிய எல்லை.

"வட வேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" — "தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாடு" — "இமிழ்கடல் வரைப்பிற் றமிழகம் அறிய" — என வந்த வாசகங்களின் சுருக்கமே மேற்கூறியது.

தமிழகத்துக்குத் தன்பெயர் தனதாகி விளங்க வழி முறை கண்ட பெரியோன்: காஞ்சிபுரம் தந்த செந்தமிழ்க் குரிசில்

தமிழர் பெருமான், அறிஞருள் அறிஞர் டாக்டர் அண்ணா துரையவர்கள்.

தமிழ்நாடு எனப் பெயர் மாற்றியதில் என்ன சாதனை இருக்கிறது? இதற்கு ஏன் இவ்வளவு பரபரப்பு? இதனுல் வரும் பெறும் பயன் என்ன? என்று கேட்கின்றவர்களும் இருக்கிருர்கள்.

தமிழ்நாடு எனப் பெயர் மாற்றியதன் அருமையை இந் நாட்டின் பாரம்பரியம், வரலாறு, பண்பாடு, உலக நியாயம், இலக்கிய மரபு, சமுதாய மேன்மை, அரசமைப்பு, தத்துவ சிந்தனை இவற்றில் அக்கறையும் துடிப்பும் உள்ளவர்கள்தாம் உணரமுடியும்.

எஞ்சினியர்கள், டாக்டர்கள், கோடீசுவரர்கள், தத்தம் தொழில்களில் மட்டும் கருத்துடைய தொழில் நுட்பவாதிகள், பிறமொழியாளர், தமிழ்நாட்டுக்கு வெளியில் தோன்றிய பிற மதத்தினர், கட்சியினர் நாட்டில் சிறு சிறு குழுக்களாக இருக்கும் சிறுபான்மைச் சமூகத்தினர்—முதலானோர் இந்தப் பெயர் மாற்றத்தின் அருமையை உணரமுடியாது. அவர்களில் பெரும் பாலோர்க்கு நாட்டின் பாரம்பரியம், அரசமைப்புப் பற்றிய செய்திகளில் உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஈடுபாடும் இருப்ப தில்லை. இதற்கு விதிவிலக்காகவுள்ள அரிய அன்பர்களும், அறிஞர்களும் இருக்கிருர்கள். அவர்கள் மிகச் சிலரேயாவர். தத்தம் சமூகம், தொழில், சொந்த வாழ்க்கை—இவற்றில் தான் அவர்கட்கு நாட்டம் இருக்கும். எல்லாச் சமுதாயத்திலும் இது ஒரு பொது உண்மை.

மேற்கூறிய இருபிரிவினரில், அரசமைப்புப்பற்றிக் கருத்தும் கவலையுமுடையோர் முதற் பிரிவினர் அவர்கள் அரசனும் ஐம்பெருங் குழுவும் போன்றவர். ஏனையோர் எண்பேராயத்தை ஒத்தவர். முதற்பிரிவினர் அரசமைத்த பிறகு, அதனை வளப்படுத்த வருவோர் இரண்டாம் பிரிவினர் என்க.

இனி இப்பெயர்மாற்றத்தால் பெற்ற பயன்கள் வருமாறு:—

1) தமிழ்த்தேயம், 'மதராஸ்' என அனுமதேயமாக இருந்த நிலைமாறித் தனக்குரிய பெயரைத் தான் பெற்றது முதற் பயன்.

2, கிரேக்கம், உரோமம், சீனம், எகுபதியம், பாரசீகம் முதலிய பண்டை நாடுகளுக்கு முந்திய பழம்பெரு நாகரீகம்

பெற்ற தமிழகம், அந்த நாடுகளைப் போலத் தன்னரசோடு இல்லாவிடினும், தன் பெயரை மட்டுமாவது பெற்றிருக்கக் கொடுத்துவைக்கவில்லை. இந்த முறைகேட்டை மாற்றித் 'தமிழ்நாடு' எனத் தனக்குரிய பெயர் தனக்கேயாகப் பெற்றிருக் கிறது இன்று.

3) "மெட்ராஸ்' என்பது எப்படி ஏற்பட்டது? என்ன பொருள் என்று இன்னும் விளங்கிற்றில்லை. ஆனால் தமிழ், தமிழகம், தமிழ்நாடு என்னும் பெயர்கள் சரித்திரம் கண்டவை. கவியிலும் காவியத்திலும் இழையோடிய தெய்விகப்பெயர்கள். இன்று அந்தப் பெயரைப் பெற்றிருக்கிறது தமிழகம்

4) தமிழகம் பலவற்றையும் இழந்த நிலையில் இறுதியில் தன் பெயரையும் மறக்கும் நிலைவந்துவிட்டால், வருவார் போவார்க்கெல்லாம் தமிழகம் ஒரு பொதுச் சொத்தாகி, வள்ள லாரும் நந்தனும் சோதியிற் கலந்ததுபோன்ற ஓர் ஐக்கி யத்தை—கற்பனையை—நனவாக்க உதவும் என எண்ணியோர் பலர். அந்தக் கனவு பலிக்கவில்லை. வரலாறு புரிந்தவர்க்கு இது புரியும்.

5) நான் மூன்றுண்டுகட்குமேல் சென்றுவந்த கண்டங்கள் பல, உலக நாடுகள் பல. கலந்துரையாடிய பேராசிரியரும் பெரியோர்களும் பலர். பல்கலைக் கழகங்கள், நூலகங்கள், கலைக்கூடங்கள் பலப் பல. இவர்கள் கலந்து பழகிய நன் மக்கள் எண்ணற்கரியர். ஆனால் தமிழ்நாடு, தமிழ் — என்னும் பெயர்களைக்கூட அறியார். தெரியாது என்னும் அளவுக்குப் பல்லாயிரத்தில்—பல நூறுயிரத்தில் ஒருவருக்கு மட்டும் சிறிதே தெரியும். இனி இந்த நிலை மாறிவிடும். தமிழ்நாடு என்று சொல்லும்போதே நாடும், மொழியும், இனமும் எல்லார்க்கும் புலனுகும்.

6) தமிழகம் தன்பெயரைப் பெற்ற அன்றே அரசின் பெயர் மாறிற்று, அதன் அங்கங்கள் பெயர் மாறின. பல துறைப் பெயர்களும் புதுப்பெயர் கொண்டன. ஏற்பட்ட மாறுதல் வருமாறு:—

தமிழ்நாட்டரசு
தமிழ்நாட்டு அமைச்சரவை
தமிழ்நாட்டுச் சட்ட மன்றம்
தமிழ்நாட்டு நீதி மன்றம்

தமிழ்நாட்டுக் காவற் படை
தமிழ்நாட்டரசுத் தலைமைச் செயலகம்
தமிழ்நாட்டு அரசுஅலுவலர் கழகம்
தமிழ்நாட்டு வருவாய்க் கழகம்
தமிழ்நாட்டு மின்சார வாரியம்
தமிழ்நாட்டு வேளாண்மைத் துறை
தமிழ்நாட்டுக் கருவூலத்துறை
தமிழ்நாட்டுப் போக்குவரத்துத் துறை
தமிழ்நாட்டுப் பொதுப்பணித் துறை
தமிழ்நாட்டுத் தேசிய மாணவர் படை
தமிழ்நாடு—கேரள மின்சார ஒப்பந்தம்
தமிழ்நாடு—மைசூர்—கேரள இராணுவ மண்டிலம்.

— என்றெல்லாம் துறைதுறை தோறும் தமிழ், தமிழ்நாடு என்று ஒருமுறை சொல்லி, அந்த நாக்கு அந்தச் சொல்லின் மீது ஒருமுறை தவழ்ந்து—அடுத்துப் பிறபிற குறிப்புக்களைச் சொல்லும் நிலை எய்தியிருக்கிறது.

7) பத்திரிகைகளில் முன்னெல்லாம் எங்கோ சில இடங்களில் தமிழ், தமிழகம் என்னும் பெயர்கள் காணப்படும், இன்றோ, நாள் தவறாமல், பத்திரிகை தோறும் பக்கம் தவறாமல், பத்திப்பத்தியாகத் தமிழ், தமிழகம், தமிழ்நாடு என்னும் சொற்கள் நித்திலம் பரப்பியது போலப் பளிச்சிடுகின்றன.

8) இதற்குமுன் அரசுப் பொறுப்பை நடத்தியவர்கள் தமது அதிகாரம், செல்வம், செல்வாக்கு, பெரும்பான்மை யனைத்தையும் தமிழ்நாடு எனப்பெயர் வருவதை ஒடுக்கவும் மறுக்கவும் தடுக்கவும் செலவிட்டார்கள். நான் கூறுவதன்று. வரலாறு கூறுவது இது. தமிழ்நாடு தன்பெயர் பெற்ற இந்த நிகழ்ச்சி உபசார வழக்கல்ல; தமிழ் வரலாற்றில், தமிழக வரலாற்றில் புத்தொளி பாய்ச்சும், முக்கிய நிகழ்ச்சியாகும்.

இப்படியாகப் பல நூற்றாண்டுகளில் நிகழாமல், இந்தத் தலைமுறைவரை நிகழ்த்தமுடியாமல் இருந்த ஒரு செயல் — செயற்கரிய செயல் — நிகழ்ந்திருக்கிறது.

"தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்றதாயென்றுகும்பிடடி" என்ற பாரதி வாழ்க, அதனை நாளும் உலகோர் நாவில் பயில விட்டுச் செயற்கரியச் செய்து மடிந்த அப்பெரியோன் வாழ்க.

பண்டைத் தமிழரின் எழுத்துக்கலை

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்.

தமிழ்நாடு மிகத்தொன்மையான நிலப்பகுதி. தமிழ்மக்கள் உலகநாகரிக வளர்ச்சியில் முதலிடம் கண்டவர்கள். மொழித்திறம் பெற்றவர்கள். உலகியற் பொருள்களை உயர்திணை அஃறிணை என்னும் பாகுபாட்டுடன் வகுத்து இலக்கணம் கண்டு வாழ்ந்தவர்கள். இந்தியா முழுவதும் நாகரிக வாழ்வியலுடன் திராவிடர் என்னும் பேரினமாய்த் திகழ்ந்தவர்கள். என்றெலாம் தமிழ் நாட்டின் தொன்மையினை ஆராய்ந்து அளவிட்டுக் கூறியிருப்பதில் ஆராய்ச்சியாளர்களின் கருத்து இன்றளவும் வேறுபட்டதில்லை.

1. பண்டைத் தமிழரின் நாகரிக வாழ்வு: இத்தகைய மேம்பாடுகளுடன் தமிழ்மக்கள் பண்டைக் காலத்திலேயே தமது தாய்மொழியில் எண்ணும் எழுத்தும் நன்கறிந்து கேள்வி மிக்குடையராய்த் திகழ்ந்தனர். இக்காலம் ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முற்பட்ட காலமேயாகும். ஆரியர் சிந்து நதிக்கரையில் குடியேறிய காலத்தில் உள்நாட்டில் இருந்த தமிழர் எழுவகை அரண்களும், தொண்ணூறு கோட்டைகளும் உடையராய் வாழ்ந்தனரென இருக்குவேதம் உரைதருகின்றது.[1]

இக்காலம் இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழரின் நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகும். இவ்வாறு, தமிழர் நாகரிக வாழ்க்கையோடு திகழ்ந்தபோது தமது வரையறையோடு கூடிய செயல்கள் இனிது நடைபெறுவதற்கு இன்றியமையாது இயைந்து நிற்கும் தமது தாய்மொழியில், இலக்கிய இலக்கண அமைதியினை முற்றக்கற்று மொழி வளர்ச்சியில் ஓர் தகுதியினைக் கற்றிருந்தனர் என்னும் உண்மை நிறுவப்பெறும்.[2]

2. தமிழரின் எழுத்துக்கலை: பண்டைத் தமிழ்மக்கள் தாம் உரையாடிய மொழிக்கு வரிவடிவு கண்டிருந்தனர். அக்

---

1. The Admixture of Aryan with Tamilian
 By, Prof Savarirayan.

2. "பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்" — மறைமலை அடிகள்.

காலத்தில் வந்த ஆரியர் தம்பால் உரையாடப்பெற்ற மொழிக்கு எழுத்திட்டுக் காட்டும் வகை அறியாதிருந்தனர். இதனை, அவர்களால் நினைக்கப்படுவது என்னும் பொருளையுடைய 'ஸ்மிருதி' என்னும் சொல்லும், கேட்கப்படுவது என்னும் பொருளுடைய "சுருதி" என்னும் சொல்லும் அவ்வட நூல்களுக்குப் பெயராக அமைந்ததனை உற்று நோக்குமிடத்து அவை எழுத்திலிட்டு எழுதப்படுவதற்குரிய தகுதியினை ஆரியரால் பெறவில்லை என்பது தெளிவாம். எனவே, ஆரியர் எழுத்திலிட்டு எழுதுமுறையினைத் தமிழருடைய எழுதுமுறையின் வளர்ச்சியினைக் கண்டே ஆக்கிக் கொண்டனராதல் வேண்டும்.

இதற்குச் சான்றாக, "ஆரியர்கள் எழுத்துக்கலையை முதல் முதல் கற்றது நாகர்களிடமிருந்தேயாகும். சமஸ்கிருத எழுத்துக்கள் இன்றளவும் இக்காரணத்தினாலேயே 'தேவ நாகரி' என்று அழைக்கப்படுகின்றது" [3] என்பதை, ஆராய்ச்சியுரை குறிக்கின்றது

3. தொல்காப்பியரும் – தமிழ் எழுத்துக்களும்: இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளளவில் தோன்றிய தமிழ் இலக்கண நூலாம் தொல்காப்பியத்துள், 'எழுத்ததிகாரம்' என்னும் குறியீட்டுடன் ஆசிரியர் தமிழர் வளர்த்த எழுத்துக்களின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகின்றார். அக்காலத்தில் தமிழுக்குரிய எழுத்துக்கள் வழக்கில் இல்லாதிருப்பின் எழுத்ததிகாரம் தோன்றுவதற்கு ஏதில்லையன்றோ!

தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவினை, அவை வளர்ந்து நின்ற நிலையிலேயே குறித்திருக்கின்றார். இதனை, "உட்பெறு புள்ளி உருவாகும்மே" என்னும் நூற்பாவில் 'ம' என்னும் எழுத்து அக்காலத்தில் எழுதப்பட்ட வரிவடிவினை அவர் குறிக்கும் விளக்கத்தால் புலனாகும். மற்றும். "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" என்னும் நூற்பாவில் மெய்யெழுத்துக்கள் புள்ளிபெற்று நிற்றலும் "எகர ஒகரத் தியற்கையுமற்றே" என்பதனால் எகர ஒகர உயிரெழுத்துக்களும் அவ்வாறே பண்டைநாளில் புள்ளி பெற்றிருந்ததையும், "புள்ளியில்லா எல்லா மெய்யும் உருவுருவாகி அகர

---

3. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் — பக்-84.

மொடு உயிர்த்தலும், ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும், ஆயீரியல உயிர்த்தவாறே" என்பதன்கண் மெய்யெழுத்துக்கள் உயிர்களோடு கூடியவழி வரிவடிவிலே உருவு திரிந்து உயிர்மெய் எழுத்தாகி நிற்கும் சிறப்பினைத் தெளிவாகக் கூறுவாராயினர்.

இப்பகுதிக்கு விளக்கவுரை எழுதிய நச்சினுர்க்கினியரும், "உருவு திரித்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம்" என்று விரித்துக் கூறுகின்ருர். பண்டைத்தமிழர் தமக்கென எழுத்துக்கலையினை வளர்த்துநின்ற சிறப்பு இதனுல் தெளிவாகும்.

4. அசோகன் காலத்து எழுத்து முறை (கி·மு. 200 அளவில்) இந்நிலையில் தமிழ் வளர்ந்தோங்கி வந்த காலத்திடையே, இந்திய நாட்டின் பெரும் பகுதியினை ஆட்சி புரிந்த அசோக மன்னனுடைய காலத்தில் உண்டான கல்வெட்டெழுத்துக்கள் இருவகை முறையுடன் அமைந்துள்ளன. ஒன்று, வட அசோக எழுத்துக்கள். மற்ருென்று தென் அசோக எழுத்துக்கள் எனப்படும். அசோக எழுத்துக்களை 'பிராம்மி' எழுத்துக்கள் என்பர். இப்பிராம்மி எழுத்துக்களைப் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் என்று கூறும் ஆராய்ச்சியும் உண்டு.

தென்னிந்தியாவில் காணப்படும் 'பிராம்மி' எழுத்துக்களாலான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை, சமண பௌத்த துறவியர்களாலேயே உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சிறு தொடராகவும் தனிச்சொல்லாகவும் ஆங்காங்குள்ள குகைகளிலும், குன்றுகளிலும், பாறைகளிலும் அத்துறவிகள் வாழ்ந்திருந்ததற்குரிய இலச்சினையாகக் காணப்படுகின்றன.

இவைகள் தொல்காப்பியர் வரையறை செய்து கூறும் தமிழ் எழுத்தியலுக்கு ஏற்புடையதாக அமையவில்லை.

பிற்காலத்தில் தமிழகத்துள் புகுந்திருந்த ஆங்கிலேயர், தமிழ் நாட்டில் அமைந்த பொருட் பெயர்களையும், இடப் பெயர்களையும் தம் முயற்சிக்கு வந்த அளவில் குறைத்தும், கூட்டியும், சிதைத்தும் கூறியிருப்பதைப் போலவே, தென் பிராம்மி எழுத்துக்களாலான சொற்களுள் பெரும்பாலானவை

அமைந்திருப்பதை அறிஞர் அறியாதிரார். தொல்காப்பியர் தமிழின் பண்டைய எழுத்துக்கட்கு தெளிவாக வரிவடிவு கூறியதுடன், சொற்களின் அமைப்பினையும், பல்வேறுபட்ட வளர்ச்சியினையும் நன்கு கூறியிருக்கும்போது, தொல்காப்பியத்திற்குப் பின்னர் தமிழகத்தில் அசோக மன்னனாலும், சமண, பௌத்த முனிவராலும் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் தமிழின் சார்புடையதாயின், இங்ஙனம் முறையும் நிலையும் மாறி நிற்பதாகுமா என்பதை ஆராய்ச்சியாளர்கள் சிந்தித்தல் வேண்டும்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு நடுவெல்லையாகக் கொண்ட கால அளவில், தமிழகத்திற்குச் சமயச்சார்பில் வடக்கிலிருந்து வந்துற்ற சமண பௌத்த துறவியர்கள் தமிழ் ஒலிக்குறிப்பில் பிராம்மிய எழுத்துக்களால் சொற்களை ஆக்க முயன்ற முயற்சியின் இலச்சினையே தமிழ் பிராம்மி கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டெழுத்துக்கள், ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்த திராவிட, நாக இனத்தவர் கையாண்டு வந்த பழைய கண்ணெழுத்துக்களின் சார்பில் தோன்றியனவேயாகும்.

5. **பிராம்மி கல்வெட்டுக்களின் எழுத்து நிலை:** சித்தண்ணல் வாயில் மலை, மதுரை சமணர் குன்று, அழகர் மலை, கருவூரைச் சார்ந்த ஆறு நாட்டான் குன்று, ஆகிய இடங்களில் தொடர் நிலையில் கிடைத்துள்ள தமிழ் பிராம்மியக் கல்வெட்டெழுத்துக்கள் தெளிந்த பொருளைத் தரும் சொற்களாக அமையவில்லை. ஆறு நாட்டான் குன்றில், சூடாமணிக் குகையில் அதிகமான தொடர்களில் தமிழ் பிராம்மி கல்லெழுத்துக்கள் காணப்படினும் அவைகளில் பல சொற்கள் தெளிந்த பொருளைத் தரவில்லை. இக் கல்வெட்டுக்களை, இந்திய கல்வெட்டாராய்ச்சிக் குழுவினர், கி. பி. 1928-ல் படியெடுத்திருப்பதுடன் குறிப்பும் வெளியிட்டுள்ளனர்.[4] மற்றும் இக்கல்வெட்டுச் செய்திகளை, பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் கி. பி. 1929-ல் தமது சேரன் செங்குட்டுவன் என்னும் ஆராய்ச்சி நூலுள், 'கருவூர் சேரரின் தலைநகராகும்' என்று கூறும் ஆராய்ச்சியுரையுள் தாம் விரும்பியவாறு எடுத்துக் காட்டியுள்ளதையும்

---

4. Ep. Rep. Nos. 335, 349, of 1928

கொண்டு தமிழ் பிராம்மி எழுத்துக்களின் நிலையை ஆராய்ந் தறிய முடிகின்றது

6 **சங்ககாலத் தமிழெழுத்துக்கள்:** இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், தமிழகத்தில் தமிழ்மொழி இலக்கண உயர்வுடன் வரிவடிவில் தெளிவும் பெருக்கமும் பெற்றிருந்தது. இக்காலத்தினையே சங்ககாலமென்று குறிக்கின்றனர். எனவே, அக்காலத்தில் வாழ்ந்த மொழிப்புலமை மிக்கத் தமிழர் கையாண்ட தமிழ் எழுத்துக்கள் யாவை என்பதை இனி குறித்துக் கூறுதல் ஏற்புடைத்தாகும். கடைச்சங்க காலத்தைத் தொடர்ந்து தோன்றியதும் இற்றைக்கு ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டதுமாகிய 'சிலப்பதிகாரம்' என்னும் முத்தமிழ்க் காப்பியத்துள் குறிக்கப்பெறும் தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவனுகும். இம்மன்னன் அவைக் களத்தில் திருமுகமெழுதுவோர் 'கண்ணெழுத்தாளர்' எனப் படுவர். சங்க நாளில் வழங்கிய தமிழெழுத்தின் பழம்பெயரே கண்ணெழுத்தாகும். "கண்ணெழுத்துப் படுத்த கைபுனை சகடமும்" (சிலம்பு-காதை-26, வரி-71.) என்றும், புகார்த் துறைமுகத்திருந்த பண்டகசாலையில் புறநாட்டு வணிகரின் பெயர்கள் மூடைகளிலே கண்ணெழுத்தில் அமைந்திருந்தன என்பதைக் குறிக்கும், "கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப் பல்பொதி" (சிலம்பு—காதை—5 வரி—112) என்றும், கூறப் பெறும் சிலப்பதிகாரத் தொடர்கள் அக்காலத்தில் தமிழர் கையாண்ட எழுத்துக்கட்குரிய பெயரைக் குறிக்கின்றன. இக்கண்ணெழுத்தினையே இக்காலக் கல்வெட்டாராய்ச்சி யினர் வட்டெழுத்துக்கள் என்று சுட்டுவராயினர்.[5]

எனவே, பண்டைத் தமிழெழுத்தாய் நின்றது வட்டெழுத் தேயாகும் செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றுப் பாறையில். உள்ள கல்வெட்டொன்று சமண முனிவரொருவர் உண்ணு நோன்பு பூண்டு உயிர்துறந்த செய்தியைக் குறிப்பதாகும் அத்தமிழ்க் கல்வெட்டு வட்டெழுத்தின் பழமைக்கோர் சான்ருக அமைந்துள்ளது. அத்தமிழெழுத்துக்கள் ஏறக் குறைய சேரன் செங்குட்டுவன் காலத்துக்கு உரியவை, என்று கூறப்படுகின்றன,[6]

5. "சேரன் செங்குட்டுவன்" — மு. இராகவையங்கார்.
6. செந்தமிழ்த்தொகுதி-5, பக்கம்-410.
திரு. கோபிநாத ராயர்.

7. வட்டெழுத்தும் தமிழ் நூல்களும்: தமிழகத்தில், குறிப்பாக பாண்டி நாட்டுப் பகுதிகளில் எங்கெல்லாம் தென் அசோக எழுத்தாகும் தமிழ் பிராம்மி எழுத்துக்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் வட்டெழுத்தாலான கல்வெட்டுகள் பல தெளிவாகக் காணப்படுகின்றன. மற்றும் பிராம்மி கல்வெட்டுகளால் அறிந்து கொள்ளக்கூடும் கருத்துக்களை விட, அங்குள்ள வட்டெழுத்தாலான கல்வெட்டுகள் தெளிவான பொருளை உணர்த்துகின்றன. மதுரை மாவட்டத்தில் கிடைக்கும் பிராம்மி கல்வெட்டுகளும், வட்டெழுத்து கல்வெட்டுகளும் இவ்வுண்மை நிலையினை உணர்த்துகின்றன.

இவற்றைக் கொண்டு ஆராய்வோமாயின் சங்ககாலத்தில் தோன்றிய திருக்குறளும், தொடர்ந்து தோன்றியுள்ள சிலப்பதிகாரமும் சங்கச் செய்யுள்களும், வட்டெழுத்துக்களாலேயே எழுதப்பெற்றவுண்மை புலனாகும். இதற்கு மேலாக தொல்காப்பியமும் வட்டெழுத்தால் எழுதப்பெற்றதென்பதைத் துணிந்து கூறலாகும்.

8. பழைய வட்டெழுத்துச் செப்புப்பட்டயம் :— இக்கருத்தினை அறிஞர் சிலரின் ஆராய்ச்சிச் சான்றுகளைக் கொண்டும் தெளிவு செய்யலாகும்

[க] கி. பி. 68இல் நிகழ்ந்த செருசலம் கோயிலின் அழிவின்பின், கிருத்துவ சமயத்தவர் பலர் தமிழகத்தில் மேற்குக்கரைப் பகுதியாகும் சேரநாட்டில் குடியேறியதாக அவர்கள் மரபுரை கூறுகின்றது. ஆனால் தமிழ் இலக்கியங்களில் அவர்களைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. ஆயினும், இரண்டாம் நூற்றாண்டில் அவர்கள் மேல் கடற்கரையில் தங்கி வாழ்ந்திருந்தனர். அப்பொழுது சேரமன்னரால் அவர்கட்கு வழங்கப்பட்ட செப்புப்பட்டயங்கள் இன்றும் உள்ளன.[7]

இச் செப்பேடுகள் பண்டைத் தமிழ் வட்டெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. இச் செப்பேடுகளில் கண்ட செய்திகள் தெளிவாக நல்ல தமிழ் நடையில் அமைந்துள்ளமையால், அக்காலத் தமிழர் கையாண்டுள்ள தமிழ் எழுத்துக்கள் வட்டெழுத்துக்களேயாகும் என்பதற்குச் சான்றாக நிற்கின்றன.[8] மற்றும்

7. Logan's Malabar Manual-Plate II Page 115–122
8, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் பக்கம்–112.

[உ] மேனாட்டறிஞராகிய A. C. பர்னல் என்னும் பேரறிஞர் தாம் எழுதியுள்ள 'தென்னிந்திய எழுத்துக் கலை' என்னும் நூலுள் கிடைக்கின்ற கருத்துக்களை ஈண்டுத் தொகுத்துக் கூறுதல் ஏற்புடையதாகும்.[9]

"தஞ்சைக்குத் தென்பாலும், தென் மலபாரிலும், திருவிதாங்கூரிலும் ஒருகாலத்தில் பயன்பட்டு வந்ததும், இன்றும் குறைந்த அளவில் திருந்திய வடிவில் பயன்பட்டு வருவதுமாகிய தமிழ் எழுத்து வடிவினை வட்டெழுத்து என்பர். பாண்டியர்களுடைய செழிப்பான காலத்தில் அவர்களுடைய நாடு முழுவதும் பரவியிருந்ததினால் இதைப் பாண்டியர் எழுத்து முறை என்றும் கூறலாம்.

சங்ககால நூல்களாகிய குறள், தொல்காப்பியம் போன்ற நூல்கள் இவ்வட்டெழுத்துக்களிலேயே எழுதப்பட்டன. மலபாரில் 17-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் இந்துக்கள் இதனைப் பயன்படுத்தி வந்தனர். தென்னிந்திய அசோக எழுத்துக்களிலிருந்துதான் வட்டெழுத்துக்கள் உண்டாயின என்று எண்ணுவதற்கு இடனில்லை. வடிவில் ஒற்றுமையுடைய சொற்களுக்கும் ஒலியில் ஒற்றுமை இல்லை. வட்டெழுத்துகட்கும் தென் பிராம்மி எழுத்துகட்கும் தொடர்பே இல்லை. வட்டெழுத்து முறை ஒரு திராவிட மொழியைத் தழுவிய சுதந்திர மொழியாதல் வேண்டும்"

இவ்வாராய்ச்சிக் குறிப்புத் தொகுப்பு அறிஞர் A. C. பர்னல் அவர்களுடையதாகும்.

9. **கருத்துரை :** பண்டைத் தமிழ் எழுத்துக்கள் வட்டெழுத்துக்களே என்பதற்கு யான் சுருக்கமாக எடுத்துக்காட்டியுள்ள மேற்கோள்களைத் தவிர, இதுவரையில் தமிழகத்தில் கிடைத்துள்ள பழைய வட்டெழுத்துக் கல்வெட்டுக்களைக் கொண்டு அவற்றில் இடம்பெற்றுள்ளதும் தமிழுக்கே உரியதும் பண்டைத் தமிழரின் எழுத்துக் கலையின் முழுத்திறமாக அமைந்ததுமாகிய உயிர்மெய் எழுத்துக்களின் வடிவினைக் கொண்டு, தமிழ் நெடுங் கணக்கெழுத்துக்களையே அமைத்துக் காட்டவியலும் என்பதற்குரிய முகவுரையாகவே இக்கட்டுரை அமைவதாகும்

---

9. "South Indian Paleagraphy"
By. A. C. Burnell Second Edition 1878 A.D.

பழந்தமிழகத்தில் வீரம் வலியுறுத்தப்பட்டது ஏன்?

சாலை இளந்திரையன், எம். ஏ. எம். லிட்.

உயர்வு பெற்ற ஒரு சமுதாயத்திலும் சில குறைகள் இருப்பது உண்டு. அச்சில சிறு குறைகளைக் கொண்டே 'அச்சமுதாயம் உயர்வு பெற்ற சமுதாயம் அல்ல' என்று சொல்லிவிட முடியாது. அரசியல், சமுதாயம் முதலியவை பற்றிய கொள்கைகளிலே கூட, முழுவதும் நன்மையேயான நடைமுறைகளை மனிதனால் (இன்றுவரை) வகுக்க முடியவில்லை. முடியாட்சியை, அதன் குறைகளோடும், நிறைகளோடுமே மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்; குடியாட்சியை, அதன் குறைகளோடும்தான் இன்றைய மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

நெல்லுக்கு உமியும் நீருக்கு நுரையும் பூவிற்குப் புல்லிதழும் போல, எந்த ஒரு சமுதாய அமைப்பிலும், சிறப்புக்களோடு, குறைகளும் இருந்தே வருகின்றன. சிலபோது, அந்தக் குறைகளே அவற்றுக்கு மாறுபட்ட உயர்வுகளைப் பெருக்கி நிலை பெறுத்துவதையும் காண்கிறோம்.

நமது பழந்தமிழ்ச் சமுதாயத்தைப்பற்றிய ஆய்வில், நாம் இந்த உண்மையை நினைவிற் கொள்ளவேண்டும்: அக்காலத்திய உயர்வுக் கொடுமுடிகளோடு அன்றையச் சிறுமைகளையும் உடன் வைத்துப் பார்த்தால்தான் அக்காலத்தாரும் மனிதர்களே என்னும் உணர்வு நமக்கு வரும். எந்த உயர்வுக்கு எந்தச்சிறுமை உந்துதலாக இருந்தது என்பதைக் கண்டறியவும் அதுவே வழி.

வீரம் ஏன்?

சங்க இலக்கியத்தில் வீரம் மிகுதியாக வலியுறுத்தப்படுகிறது; அதிலே சிறப்புற்றவன் விதந்து ஓதவும் படுகிறான். அடிக்கடிப் போர்கள் நிகழ்ந்தது மட்டுமே அந்த வீர வலியுறுத்துக்குக் காரணம் என்று சொல்ல முடியாது. அண்டை நாட்டானின் படை எடுப்பைத் தடுக்கவும் அயலான் மீது படைஎடுத்துப் போர்ப்புகழ் நாட்டவும் மட்டுமின்றி, உள்நாட்டு வாழ்வில் அமைதியை நிலைநாட்டவும் அக்காலத்தில் வீரர்கள் தேவைப்பட்டார்கள்.

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு"

என்னும் குறளில் ஆறலைக்கள்வர் (என்னும் வழிப்பறிக்கொள்ளை

யர்கள்) கூட்டமும் உட்பகையுள் ஒன்ருகக் குறிக்கப்படுகிறது. இக்கூட்டத்தார் எவ்வெவ்வாறு மக்களுக்கு இன்னல் விளைத் தார்கள் என்னும் செய்தி சங்க இலக்கியத்தில் விரிவாகச் சொல்லப்படுகிறது. இவர்களின் செயல்முறைகளைப் பற்றிப் படிக்கையில், "கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனோடு நேர்" என்னும் செங்கோன்மைப் பாட்டில் குறிக்கப்படும் "கொடியோர்" இவர்களாகவே இருக்க வேண்டும் என்னும் எண்ணமே உண்டாகிறது. ஒருபக்கம் நாகரிகம் செழித்த தமிழகத்தில், இந்தக் கொடியவர்கள் மற்றொருபக்கம் செழித்து வந்தார்கள் என்பதை, எட்டும், பத்துமாகிய சங்க இலக்கியம் பரக்கப் பேசுகிறது. அவற்றைப் படிக்கையில், அவ்வப்போது ஏற்படும் போர்களை விட, அன்ருடம் தொல்லை விளைக்கும் இவர்களைத் தொலைக்கவும் இவர்களிடமிருந்து தப்பவுமே வீரம் உடைமை வலியுறுத்தப் பட்டது என்னும் எண்ணம் மேலோங்குகிறது.

கொலை விளையாட்டு

சங்க இலக்கியப் பாலைக்காட்சிகளில் ஆறலைப்போரின் கொலைக் கொடுமையும் ஒன்ருகக் குறிக்கப்படுகிறது. களவு செய்வதையும் கொள்ளையடிப்பதையுமே வாழ்வாகக் கொண்ட இவர்கள் 'வன்கண் ஆடவர்' என்றும் 'கொடுவில் ஆடவர்' என்றும் பிறவாறும், கொடுமை இயல்பு தோன்றுமாறு குறிக் கப்படுகிருர்கள். கொலையையும் அலையையுமே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட இவர்களின் நடைமுறையைக் கவனித் தால், இவர்களை மனிதர்களாகவே ஏற்கத் தோன்றவில்லை! வழிப்போக்கர்களின் பொருளைப் பறித்துக் கொள்வதுடனே, பொருளுடையவரைத் துன்புறுத்தி அதைப் பறிப்பதுடனே இவர்கள் அமையவில்லை; பொருள் இல்லாமல் சும்மா போகின்ற வழிப்போக்கர்களைக் கொன்று களிகொள்வதும் இவர்களின் வழக்கமாக இருந்திருக்கிறது!

"கொள்ளும் பொருளில ராயினும், வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர்வெளவ..."

என்னும் கலித்தொகை (4)ப் பாடற்பகுதி, "மற்றவர்கள் அம்பு பட்டுத் துடிதுடிப்பதைக் காண்பதே அவர்களுக்கு ஆனந்தம்" என்று கூறுகிறது...

"தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினறடி பாயும்" என்பது ஒரு பழமொழி. இந்தக் கொடியவர்களின் மக்களாகிய

இளைஞர்கள் இந்தப் பழமொழியையே மெய்ப்பிக்கிறார்கள்:

"அம்புதொடை அமைதி காண்மார், வம்பலர்
கலன்இலர் ஆயினும், கொன்று புள்ளூட்டும்
கல்லா இளையர்"

என்று இவர்களை அகநானூறு (375) குறிப்பிடுகிறது தங்களுக்குச் சரியாக அம்புஎய்யத் தெரிகிறதா என்பதை அறிவதற்காக வழிப்போக்கர்களைத் தாக்கிக் கொல்கிறார்கள். தேவைக்காகப் பயிலப்படும் கலை அல்லது தொழில் (வரையறைப் படுத்தப் படாவிடில்) கொடுமையின் எல்லைக்கே போய்விடும் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு 'கலை கலைக்காகவே' என்னும் தடத்திற் போய்விட்ட கலையும் இப்படித்தானே மக்களின் துயரத்தைத் தீர்க்க மற்றவர்களைத் தூண்டாமல், அதை அழகுறச் சித்திரிப்பதிலேயே தன் திறமையைக் காட்டுகிறது!...

பதுக்கை

பெரும்பாலும் வணிகச்சாத்து என்னும் வணிகக் கூட்டத்தினரையும் சிறுபான்மை தனி மனிதரையும் தாக்கியும் கொன்றும் அவர்களின் பொருளைப்பறிப்பது இந்தக் கொடியவர்களின் வழக்கம். அதனாலேயே வணிகர்கள் தனித்தனியே செல்லாமல், கூட்டங் கூட்டமாகவே (சாத்தாக) ஓரிடத்திலிருந்து வேற்றிடம் செல்வது வழக்கமாக இருந்தது. இத்தகைய வழக்கம் ஆங்கில ஆட்சியின் கடைசிக்காலம் வரை நம் நாட்டில் இருந்தது; ஆறலைக்கள்வர்கள் அவர்களைத் தாக்கிப் பொருள்களைப் பறிக்கும் வழக்கமும் (இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில்) அண்மைக்காலம் வரை இருந்தது. வட இந்தியக் காட்டுவழிகளில் இந்தக் கொள்ளைக் கூட்டத்தார் இன்றும் இருந்து வருகிறார்கள்.

காட்டு வழியிலே கொல்லப்பட்டவர்களைப் புதைப்பாரோ எரிப்பாரோ கிடையாது. அந்தக் கொலைஞர்களே, மரக்கிளைகளை வெட்டிப்போட்டு அந்த உடல்களை மூடிவிடுவார்கள் இவ்வாறு மூடிய தழைக்குவியல் "பதுக்கை" என்று சொல்லப்பட்டது. பாலை நிலத்தில் இத்தகைய பதுக்கைகள் நிரம்ப இருக்கும் என்பது,

"வெண்நுனை அம்பின் விசையிட வீழ்ந்தோர்
எண்ணுவரம் பறியா உவலிடு பதுக்கை"

என்னும் அகநானூற்றுப் பாடற் (109) பகுதியால் தெரிகிறது.

"ஊர் இல்ல, உயவு அரிய, நீர் இல்ல, நீள் இடைய, பார்வல் இருக்கைக் கவிகண் நோக்கின் செந்தொடை பிழையா வன் கண் ஆடவர், அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை" என்னும் புறநானூற்றுப்பாடல் (3) பகுதியும் இதைச் சித்திரிக்கிறது. ஊர்களோ ஆள் நடமாட்டமோ இல்லாத வறண்ட பகுதியில் பதுங்கி இருந்து, வழிப்போக்கரை எய்து வீழ்த்துகிறார்கள் இந்தக் கொடியவர்கள். குறுந்தொகை, அகநானூறு முதலான நூல்களில் பதுக்கையைப் பற்றிய செய்தி பல இடங்களில் குறிக்கப்படுகிறது.

போர்க்களமோ!

"இலைமாண் பகழிச் சிலைமாண் இரீஇ, அன்பில் ஆடவர் அலைத்தலின் பலருடன், வம்பலர் தொலைந்த அஞ்சுவரு கவலை" என்று பாலைவழி (நற். 352) வருணிக்கப்படுகிறது. நற்றிணை 164ஆம் பாடலில், பாலைவழியில் சென்ற நரி ஒன்று, அங்கே குவிக்கப்பட்டிருந்த பிணங்களிலிருந்து உண்டான நாற்றத்தைப் பொறுக்க மாட்டாமல் வேறுவழியில் திரும்பிச் சென்றது என்று கூறப்படுகிறது. இவ்வாறு கொன்று வீழ்த்தப்பட்டவர்களின் உடல்தசையைப் பருந்துகள் வந்து உண்ணும் என்ற செய்தி புறநானூற்றிலும் (3) அகநானூற்றிற் பல இடங்களிலும் (161, 175) சொல்லப்படுகிறது. இவைகளைப் பார்க்கையில் பிற்காலப் பரணி நூல்களில் வரும் போர்க்கள வருணனையே நினைவு வருகிறது. பொருள் ஏதும் கொண்டு வராத வழிப்போக்கர்களின் பரிதாபத்தைப் பார்த்து இந்தக் கொடியவர்கள் அவர்களைக் கொல்லாமல் விட்டுவிட்டால், இவர்களின் தலைவனாகிய மாகொடியவன், அவ்வாறு விட்ட "குற்றத்துக்காக" யானைத் தந்தங்களையும் புலியின் தோல்களையும் தண்டமாக விதித்து வசூலிப்பான் என்னும் கொடுவேடிக்கைச் செய்தி ஒன்றும் ஒரு பாடலில் (அகம்: 109) காணப்படுகிறது!.

கற்பனை அன்று

இந்தக் காட்சிகளின் கொடுமையையும், சங்கப்பாடல்கள் பலவற்றில் எடுத்தோதப்படும் உயர்ந்த உண்மைகள்-நிகழ்ச்சிகள் முதலியவற்றையும் சேர்த்துப் பார்க்கும் நம்மால் இதை எல்லாம் உண்மை என்றே நம்ப முடியவில்லை: 'ஒருவேளை. அக்காலக் கவிமரபுகளில் ஒன்றான கற்பனையாக இருக்குமோ? பிரிவின் கொடுமையை உணர்த்துவதற்காகவே புலவர்கள்

இப்படி இல்லது புனைந்து பாடியிருப்பார்களோ?' என்று கூட எண்ணுகிறோம். ஆனால், அகப்பாடல்களில் மட்டுமன்றிப் புறப்பாடல்களிலும் இச்செய்தி வருகிறது; அக்கால அரசன் ஒருவன், இக்கொடியோரைத் தன் நாட்டிலிருந்து ஒழித்ததற்காகவே பாராட்டப்பட்டிருக்கிறான்.

அகத்திலும் புறத்திலும் இந்தக் கொடிய காட்சியின் வருணனைகளைக் கண்டுவரும் நமக்குப் பெரும்பாணாற்றுப்படை ஓரளவு ஆறுதல் அளிக்கிறது. இப்பாட்டு தொண்டைமான் இளந்திரையனின் நாட்டை,

"அத்தம் செல்வோர் அலறத் தாக்கி,
கைப்பொருள் வவ்வும் களவேர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்"

என்று வருணிக்கிறது. இவ்அரசனின் சிறப்புக்களைப் பாடும் இந்த ஆற்றுப்படைப்பாடல், ஆறலை கள்வரை ஒழித்த சிறப்பை விதந்து ஓதுவதிலிருந்து, அக்காலத்து மக்களுக்கு அவனுடைய செயல் எவ்வளவு ஆறுதல் அளித்தது என்பது புலப்படுகிறது.

குறுந்தொகையின் ஒரு பாடலில், காதலியோடு தன் ஊருக்குச் செல்லுகின்ற ஓர் இளைஞனை, வழியில் கண்டவர்கள் மேலே செல்ல வேண்டாம் என்று தடுக்கும் செய்தி வருகிறது. ஆறலை கள்வர்களைக் கண்டு மக்கள் எவ்வளவு நடுங்கினார்கள் என்பதை அச்செய்தி தெளிவாக விளக்குகிறது :

"எல்லும் எல்லின்று; பாடுங் கேளாய்;
செல்லா தீமோ, சிறுபிடி துணையே !—
வேற்றுமுனை வெம்மையின் சாத்துவந்து இறுத்தென,
வளையணி நெடுவேல் ஏந்தி
மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே !"

நேரம் இருட்டாகி விட்டது. அது மட்டுமல்ல; நீங்கள் செல்ல வேண்டிய வழியில் வந்த வணிகக் கூட்டத்தையே எதிரிகளின் படையாகக் கருதியவர்கள் போல, தங்கள் தண்ணுமையை ஒழித்துக்கொண்டு ஆறலை கள்வர்கள் அவர்களைத் தாக்குகிறார்கள். எனவே இவளை அழைத்துக் கொண்டு அந்த வழியில் செல்லாதே! — என்பது இந்தப் பாடலின் (390) பொருள். வீரத்துக்கே விளைநிலமாக நாம்

போற்றும் நமது தமிழ் நாட்டிலேதான், அப்பாவி வணிகர்களை எதிரிகளாகக் கருதித், தண்ணுமை வாத்தியம் இசைத்துக்கொண்டு அவர்களைத் தாக்கிக்கொன்ற தீயவர்கள் இருந்திருக்கிறார்கள்! வழிப்போக்கர்கள் அந்த இளைஞனைத் தடுப்பதைப் பார்த்தால், அக்காலத்தில் அக்கொடியவர்களைத் தட்டிக் கேட்போரும் இருந்ததில்லை என்றே தெரிகிறது!

வீரத்துக்கே முதலிடம்

பொருளை மட்டுமின்றி உயிரையும் பறிக்கும் கொடியவர்களாக அவர்கள் இருந்ததனாலேயே, அவர்களை வேரறுத்த இளந்திரையனின் செயல் விதந்து பாராட்டப்பட்டுள்ளது. பிறர் துடிதுடித்துச் சாவதைக் காண்பதிலே அல்லவா, அவர்கள் இன்பம் கண்டிருக்கின்றார்கள்! 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்று பாடிய சங்க இலக்கியம் இதையும் பாடுகிறது என்றால், விளக்கின் அடியிலே உள்ள இருள் போல, இது தணிக்க முடியாத கொடுமையாக இருந்திருக்கிறது என்று தான் தெரிகிறது. இதனாலேதான், போர் ஆபத்து உள்ள நாடுகளில் எல்லோருக்கும் படைப்பயிற்சி கட்டாயமாக்கப்பட்டிருப்பது போல,— அக்காலத்தில் ஒவ்வொருவனுக்கும் உடலுறுதியும் வீரமும் வலியுறுத்தப் பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் பார்த்தால்தான் "களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (என் மகன் வீரனாக விளங்க வேண்டும்!) என்னும் வலியுறுத்தின் பொருட்பரப்பு முழுமையாகப் புலப்படுகிறது.

சங்க இலக்கியத் தலைவன் (காதலனாகிய கணவர்) வீரனாகவே சித்திரிக்கப்படுவதைப் பார்க்கிறோம்; பல இன்னல்களையும் கடந்து, இரவு நேரத்தில் தன் தலைவியைச் சந்திக்க வந்துநிற்கும் அவனுடைய துணிச்சலைக் கண்டு தோழி வியப்படைகிறாள். சமயம் நேரும்போது, அவன் இந்த ஆறலைகள்வரை வெல்லக் கூடியவனாக இருக்கவேண்டும் என்று கருதியதாலேயே அக்காலத்தில் வீரம் செறிந்த தலைவனுக்கே மதிப்புக்கொடுக்கப்பட்டது என்பது விளங்குகிறது.

அலைக்கு அஞ்சா வீரம்

உடன்போக்கு மேற்கொண்ட தன்னுடைய காதலியை அழைத்துக்கொண்டு பாலை வழியிலே செல்லுகிறான் ஒருவன்.

பின்னால் யாரோ சிலர் வருகின்ற ஆரவாரம் கேட்கிறது. அவர்கள் அவளுடைய உறவினர்களா அல்லது பாலை நிலத்து ஆறலை கள்வர்களா என்று தெரியவில்லை. அவளுடைய பெற்றோர் வந்தால், அவர்களின் கோபத்தெதிரே நிற்காமல் அவன் மறைந்து கொள்வதே நல்லது; கள்வர் வந்தால்தான், எதிர்த்து நின்று அவர்களை ஒழிக்க வேண்டும் ஆதலால், "நீ இங்கேயே தனியே விளையாடிக்கொண்டிரு; நான் அதோ, அந்தப் பெரிய வேங்கை மரத்தில் மறைந்து நின்று பார்க்கிறேன்;

"அமர்வரின் அஞ்சேன்; பெயர்க்குவென்!
நுமர்வரின், மறைகுவென் மாஅ யோளே"

என்று அவளிடம் சொல்லிவிட்டு (நற்றிணை: 362) வேங்கைக்குப் பின்னால் மறைகிறான். "அமர்வரின் அஞ்சேன், பெயர்க்குவன்!" என்று கூறும் துணிவு இருந்ததனாலே தான் அவளை அழைத்துக்கொண்டு காட்டு வழியில் புறப்பட்டிருக்கிறான், அந்த வீரத் தலைவன்!

வில்லாற்றலும், வேலாற்றலும், நெஞ்சுரமும் இல்லாத ஒருவன் இந்தக் கொடியோர் வாழும் பாலை நிலத்தைக் கடப்பதெங்கே? பொருள் தேடுவதெங்கே? பொருளுடன் திரும்பி வந்து மணம்புரிந்து கொண்டு வாழ்வது எங்கே? திருமணத்துக்குத் தடை ஏற்படும்போது, தன் தலைவியை அழைத்துச் செல்லும் உடன்போக்கைப் பற்றி அவன் நினைப்பதுதான் எங்கே?...

எது கவிதை?

வித்துவான், சொ. சிங்காரவேலன், எம். ஏ., டிப். லிங்.,
(தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்)

கால வெள்ளத்தில் :

கவிதை என்பது எல்லோராலும் எழுதக்கூடிய ஒன்றன்று; உணர்வின் அநுபவமும், ஒலிநயம் சான்ற அகமும், உலகினை ஊடுருவி நோக்கும் உயர்நலமும் வாய்ந்தவர்க்கே கைவரும் கலை அது. மற்றையோர்க்கு அது சுட்டுப் போட்டாலும் வராது. தகுதியில்லாதவர் எழுவதும், எழுந்து கவிதை என்ற பெயரில் ஏதேனும் மொழிவதும் கேலிக் கூத்தாகவே முடியும். படைப்புத் திறன் (Creative Power) அற்றவர் பாட்டெழுத முற்படுவது, கற்றவர் நகைப்பிற்குரியதாகவே முடியும். அடிமை மனம் உள்ளவரும், அவரால் தமக்கு ஏதேனும் செயல் முடிக்க வேண்டும் என்று எண்ணுபவரும் வேண்டுமானல் பாராட்டலாமே தவிர, உண்மைக் கவிதை நாட்டம் உடையவர் அதனை ஒரு பொருட்டாக எண்ண மாட்டார். இலக்கிய வரலாற்றில் இத்தகு கவிதைகள் இடம் பெறவியலாது; கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பெறும் கூளங்களாகவே அவை கழிந்தொழியும் என்பது உறுதி.

வரையறை வேண்டும் :

கவிதை எம்மொழியிலாயினும் ஒரு சில வரையறைகட்குட்பட்டு விளங்குவது. அந்த வரையறைகள் இயற்கை உணர்வினைக் கட்டுப்படுத்துவன அல்ல; இயற்கை உணர்வினை ஓர் ஒழுங்கினுக்கு உட்படுத்திச் செழிக்க வைப்பன என்றே கூறலாம். வரையறை வேண்டாம் என்று கூறும் மன்பதை பெருகினல், அவ்வரையறை எதிலும் வேண்டாம் என்று கூறும் இழிதகைமையை யாரும் ஒத்துக்கொள்ள முடியுமா ?

வள்ளுவர் கூற்று :

திருவள்ளுவரும் வரையறை வேண்டும் என்ற கொள்கை உடையவர். எதற்கும் ஒரு வரம்பு வேண்டும்; வரம்பு மீறிய வாழ்வு எப்படி வாழ்வு ஆகாதோ, அது போன்றதே வரம்பு முற்றும் மீறிய கவிதையும். வரம்பற்ற வாழ்வியல் கற்றோ

ரால் தழுவிக் கொள்ளப்படும்; காலம் வருமாளுல் வரம்பு மீறிய கவிதையும் தழுவிக்கொள்ளப்படும். இல்லையேல் புறக்கணிக்கப்படும். 'வரம்பு — கரையற்ற குளத்தில் நீர் தேங்காது; அளவளாவுதல் இல்லாதவன்பால் இன்பம் நிரம்பாது' என்று உவமையாக்குவர் வள்ளுவர்[1]. அது மட்டுமோ? 'வட்டாடுதற்கும் ஓர் அரங்கு வேண்டும்' என்பர் அவர்[2]. இந்த அடிப்படையில்தான் கவிதைக்கு ஒரு வரையறை வேண்டும் என்ற கருத்தை நாம் ஒப்புகின்ருேம்.

உள்ளத்தை உயர்த்துதல் :

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டா என்று அறவியல் தடுப்பது போன்று, தவருன நிலையில், தவருத அறமும் தவறும் நிலையில், மனத்தை கீழ் நோக்கி யீர்க்கும் கயமைத் துணுக்குகள் கவிதை யாகமாட்டா என்று அன்பியல் தடுக்கின்றது. அதற்கு மாசுகள் நீங்கிய உயர் கவிதைகளே நாட்டில் உருவாதல் வேண்டும்; அத்தகு கவிஞர்களே சீரிய கவிஞரும் ஆவர்[3].

'பண்பாட்டு வீழ்ச்சி'

இன்று நாட்டிற் பலர் கவிதைகளை—கவிதைக் கிறுக்கல்களை நோக்குங்கால் உண்மைக் கவிதை விரைவில் ஒழிந்துவிடுமோ என்று கவலைப்படநேர்கிறது. செய்யுளியல் கண்ட செந்தமிழ்நாடு, யாப்பதிகாரம் கண்ட தாயகம், அழகு வரையறைகளை இயல்பான உணர்ச்சித்தூண்டுதல்களுக்கு உரிய நிலையில் விதித்த பழைய நாடு அழிந்துவிடுமோ என்ற கவலை எல்லோர் மனத்தும் தோன்ருவிட்டாலும், பழந்தமிழை முறையே கற்று புத்துலகக்கவிதைகளையும் முறையே நோக்கி ஒப்பிட்டு மனத்தகத்தே பண்பாட்டு வீழ்ச்சியைக்கண்டு பரிந்திடும் சிலர் உள்ளங்களிலேனும் தோன்ருமல் இல்லை.

---

1 அளவளாவில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று — திருக்குறள்—53-3

2 அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் —திருக்குறள்—41-1

3 "A Poetry of revolt against moral ideas is a poetry of revolt against life; a poetry of indifference towards moral ideas is a poetry of indifference towards life" —Maththew Arnold. (Essay on Wordsworth, in "Essays in criticism" II series)

இதற்கு மாற்று என்ன ? 'புதுக்கவிதை' பாடும் கவிஞர்கள், பழைய மரபினைச் சிறிதும் கல்லாது, தமக்கே உரியநிலையில் புறக்கணித்துச் செல்லும் பொல்லாப் போக்கினை உடனடியாகத் தவிர்த்தல் வேண்டும். 'பழையன வெல்லாம் கவிதையாகா; யாம் பிதற்றுவனவே புதிய மெய்க்கவிதைகள்' என்று துணிந்தெழுதும் இலக்கிய வட்டங்களும், தான் தோன்றித் தருக்கர்களும் மெய்யுணர்வு பெற்றுத் தெளிதல் வேண்டும்.

எது கவிதை? பலதிறப்பட்ட கூற்றுக்கள்: [4]

எது கவிதை? இக்கேள்வி அறிஞர் உள்ளத்தே அரும்பிப் போதாகி மலர்ந்து நின்ற தொல்பெருங் கேள்வி ஆகும். சான்சன் (Johnson) சாற்றுவார்: 'அறிவுக்கு ஒத்த நிலையில் உண்மையும், கற்பனையும் இணையுங்கால் உண்டாகும் இன்பத்தினை விளைக்கின்ற யாப்பமைதிக்கு உட்பட்ட வெளியீடுதான் கவிதை' 'அது ஒருவகையில் கண்டுபிடிப்பே' என்பதும் அப்பேரறிஞர் கருத்தே (i).

இக்கேள்வியைக் கேட்டுப் பின் மில் (Mill) என்பார், 'உணர்ச்சி தானே பொங்கிப்பாய்ந்திடச் சொற்களும் கருத்தும் கூடி விளைவதே கவிதை' என்றனர். (ii) கவிதை என்று நாம் எதைக் கருதுகின்றோம்' எனில், இல்லாததைக் கற்பனையாக்கிக் கவினுறுத்தும் கலையையும், வண்ணங்களைக்கொண்டு ஓவியன் தீட்டுமாறு சொற்களைக் கொண்டு சுவைபெறத் தீட்டும் கலையையும்தான் என்று மெக்காலே (Macaulay) இயம்பினர் (iii) 'கவிதையை நாம் பண்ணூர்ந்தக் கருத்து எனக் கூறலாம்' என்று கழறுவர் கார்லைல் (Carlyle) என்னுங்

4 An introduction to the study of Literature—Hudson pp-64-65.

(i) **Johnson:** "Poetry is metrical composition: it is the art of writing pleasure with truth by calling imagination to the help of reason."

(ii "What is Poetry" asks Mill, "but the thought and words in which emotion spontaneously embodies itself".

(iii) "By Poetry" says Macaulay, "We mean the art of employing words in such a manner as to produce an illusion on the imagination the art of doing by means of words what the painter does by means of colour".

கற்றவர். (iv) தம்முடைய திறனாய்வு நூலில் செல்லி (Shelly) 'கவிதையாவது கற்பனையின் விளக்கம்' என்று பொதுப்பட நவின்றனர். (v) 'கற்பனையும் உணர்வுகளும் இணைந்த ஒரு நடையே கவிதை நடை' என்றனர். ஆசுலிட்டு (Hazlitt) என்னும் அறிஞர் (vi) 'உண்மை காணும் உணர்வின் கூற்று; கற்பனையும் வெறுங்கற்பனையும் அழகும் ஆற்றலும் ததும்பக் கூடியும் விளக்கியும் வேற்றுமைப்பட்ட கூறுகளில் வெளிப் படும் ஒற்றுமை நடை உடையது' என்று லீ அண்டு (Leigh Hunt) என்பார் கூறினர் (vii) கோல்ரிட்ச் (Coleridge) என் பார் கருத்துப்படிக் 'கவிதை என்பது அறிவியலுக்கு முரண் பட்டது; அதனுடைய உடனடிப் பயன் இன்பம் ஊட்டுவதா குமே யன்றி உண்மை காண்டல் ஆகாது' என்பதாகும். (viii) 'மனித வாழ்வின் சொற்கள் ஒளியுடையதும், முழுமை நிரம்பி யதுமான கூற்றினை உடையதாகிக் கவிதைத் தன்மை வந்து எய்துகின்றன' என்பது மாத்தியூ அர்னல்டு (Mathew Arnold) கருத்து. (ix) 'கவிதை-உண்மை, கவிதையழகு தோன்றத் தெளிவுறுத்தப்பெறும் வாழ்வின் திறனாய்வே உண்மைக் கவிதை' என்று அவரே பிறிதொரு நூலிற் பேசு

(iv) "poetry" declares carlyle "we will call musical thought."

(v) "Poetry" says Shelley, "in a general sense may be defined as the expression of the imagination."

(vi) "It is" says Hazlitt, "the language of the imagination and passions."

(vii) Says Leigh Hunt, "the utterance of a passion for truth, beauty and power, embodying illustrating its conceptions by imagination and fancy and modulating its language on the principle of variety in unity."

(viii) In coleridge's view, "Poetry is the anti-thesis of science, having for its immediate object pleasure not truth."

(ix) According to Mathew Arnold, "it is simply the most delightful and perfect form of utterance that human words can "reach."

கின்றனர். (x) எட்கார் ஆலன் போ (Edgar Allan Poe) 'அழகின் ஒலி நயம் இணைந்த படைப்பே கவிதை' என்று அறிவுறுத்தினர். (xi) 'உயர்வுசான்ற அறநிலையில், உயர்ந்த மெய்ப்பாட்டுணர்வுகளைத் தூண்டுதற்குக் கற்பனையால் தோன்றும் கருத்து வடிவமே' என்று கவிதையைப் புகழ்ந்தனர் இரசுகின் (Ruskin) என்னும் மூதறிவாளர். (xii) 'நிலைபேருன கலையழகு ததும்பிய வெளியீடும், மனித மனத்தின் உணர்வும், ஒலியொழுங்கும் இணைந்த படைப்புமே கவிதை' என்று விளக்கினர் தண்டன் (Watts Dunton) என்னும் பேரறிவாளர் (xiii)

இவ்வாறு பலவகைப்பட்ட கூற்றுக்கள் எது கவிதை என்பது குறித்து மேலை நாட்டில் எழுந்துள்ளன. இவையனைத்தும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையிலும் கவிதையை நோக்கியனவே; இங்குக் கூறிய அனைத்தும் கவிதையின் இலக்கணங்களாகக் கொள்ளத்தக்கனவே என்று கூறலாம். கற்பனை உணர்ச்சி, உணர்த்துதல், ஒலி நயம், வடிவம், ஆகிய அனைத்தினும் மாண்புற்று விளங்குவதே உயர்ந்த கவிதையாக இருக்கமுடியும் என்பது இவற்ருல் விளங்கித் தோன்றும் மெய்ம்மையாகும்.

உள்ளுணர்வுத் தூண்டல் :

இத்தகைய இயல்புகள் அனைத்தையும் கருதிக்கொண்டா கவிஞன் கவிதையை இயற்றுகின்ருன்? அவனது உள்ளுணர்வு தூண்ட வெளிவரும் வெளியீட்டில் இவையனைத்தும் தாமே வந்து பொருந்துகின்றன· உள்ளுணர்வே (Inspiration)

(x) "It is a criticism of life under the conditions fixed for such a criticism by the laws of poetic truth and public beauty."

(xi) "It is the rhythmic creation of beauty."

(xii) "The suggestion by, the imagination, of noble grounds for the noble emotions.

(xiii) "The concrete, and artistic expression of the human mind in emotional and rhythmical language."

கவிதைக்கு மூலவித்து என்று உணர்தலே சிறந்தது. [5] உள்ளுணர்வுதூண்ட எழுதப்பெறும் கவிதைகளில் கற்பனை இழைகிறது; வடிவம் அமைகிறது; ஒலி நயம் குழைகின்றது; கவிஞன் தான் உணர்த்த வேண்டியதை மெல்ல மெல்லப் படிப்போர் நெஞ்சிற் பதித்து விடுகின்றான். உணர்ச்சியை இவ்வாறு கற்போர் மனத்தில் தூண்டாத வரையில் ஒரு கவிதை கவிதையாகிவிடாது. [6] இவ்வாறு ஓர் அற்புதமாகக் கவிதை விளங்குவதாலேயே 'இது கடவுளின் படைப்பு; கடவுள் தன் அருமந்த செல்வர்களையே கவிஞர்கள் ஆக்கிப் பிறப்பித்தான். காதல், ஆற்றல் இரண்டிலும் கடவுளாற்றலை மனிதன் பெறுவதற்குக் கவிதைகள் காரணமாவது இதனாலேயே' என்று அருங்கவிஞர் பெய்லி (Bailey) யும் பாடுவாராயினர்; [7] 'படைப்புக் கடவுள் பாவலனுக்கு நிகராகான்; ஏனெனில் அவனது படைப்பு - மனிதப் படைப்பு அழிந்திடும். பாவலன் கற்பனையால் செய்யும் உயர் படைப்புக்கள் அழியமாட்டா, என்று பைந்தமிழ்ப் பாட்டொன்றும் பகர்வது இங்கு உணரத்தக்கது[8] படைப்புக்கடவுள் படைத்த உலகப்பொருள்கள் அனைத்தினுள்ளும், அவனது பாட்டமுதப்படைப்பே பெரிதும் சிறந்தது என்று பெருங் கவிஞர் பாரதியும் பேசுவாராயினர்.

'ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
காணமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா'

என்ற அவரது கவிதைப் பகுதி[9] இக்கலையின் அறநிலை யுண்

---

5 "Poetry comes into being at the direct call of three powers, inspiration, beauty and delight, and brings them to us and us to them by the magic charm of the inspired rhythmic word." —Sri Aurobindo, "The Future Poetry" (1953)—pp. 303-304.

6 "Poetry is not poetry until it reaches the other person and provokes him to the pre intended emotion reaction." —Roland Lewis, "Creative Poetry," (1931) —P-320.

7 'Poetry is itself a thing of God.
He made his Prophets poets and the more
We feel of poetry do we become
Like God in love and power —Ibid—P.317.

8 குமரகுருபரர், "நீதிநெறி விளக்கம்"

9 பாரதியார், "குயில் பாட்டு"

மையை அவர் உணர்ந்து தெளிந்த பாங்கினைத் தம்மை மறந்த நிலையில் வெளிப்படுத்தும் வண்ணத்தை யெடுத்துக்காட்டும் அன்றோ?

சிலர் செய்கை :

அரிதாக உணரத்தக்க இக்கவிதைக் கலையை இன்றுசிலர் மிக எளிதாகக் கருதிப் புனையத்தலைப்பட்டுக் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவர்களாகின்றனர். புறந்தூய்மை, அகந்தூய்மை இரண்டும் கெட்டவர் கூற்று மன்பதையிற் பொல்லாங்கை மலியச் செய்யுமே அன்றி, மாண்பினைத் தழைத்திடச் செய்யாது. மன்பதையை உயர்த்தும் கவிதை களை இயற்றி உய்வோரே உலகில் நிலைபெறுவர்; மன்பதை யைக் கயமை நெறிக்கு இட்டுச்சென்று, சிறுநெறிப்படுத்தும் சிறுமதியாளர்களது புன்மைக் கூற்றுக்கள் புற்றீசலெனப் பெருகாதவாறு காத்துக்கொள்ளவேண்டும்

நல்லோர் கடன் :

எல்லோரும் ஒன்றுபட்டு இம்முயற்சி தலைப்பட்டால் ஒழிய எதிர்கால கவிதை உலகம் தமிழகத்தைப் பொறுத்தவரை இருண்டுவிடும்; தமிழ்மரபு அறிந்து காத்து, புதிய கொள்கை களை தழுவி யெழுதிய பாரதியும், கவிமணியும், பாரதிதாசனும் பிறந்த மண்ணிலே நெஞ்சினை நிமிர்த்திக் கோணல் அறிவை கூராக்கி. மறுமலர்ச்சிக் கருத்துக்களை எடுத்துரைக்கும் புதிய கவிஞர்கள் மலரவேண்டும் 'பாட்டை மாறிப்' பொரு ளாசைக் குறிக்கோளுடன் திரியும் புதுக் கவி புனைவோர் உண்மைப் பாட்டையை நாடுதல் வேண்டும். மக்கள் மனம் கெடுமாறு, பால் உணர்ச்சிப் பகட்டையே கருதிக் கருதிப் பாடிச் சிறுமைச் சேற்றிலே தள்ளாது, 'பண்பாட்டு வீழ்ச்சி' யையே பொருளாகக் கொள்ளாது, உயர்த்தும் உள்ளத்தைத் தூண்டுகின்ற திருப்பாட்டுக்களையே எழுதுதல் வேண்டும்; அவ்வறவோர் கூறும் மொழிகளுக்குச் செவிசாய்த்துச் சிரந் தாழ்க்கும் உண்மைப் போக்கினை உலகமும் பின்பற்றுதல் வேண்டும். 'இழுமென் மொழியால் விழுமியது நுவலல்' என்ற தொல்காப்பியர் தூமொழியே கவிதைக்கு அடிப்படை கூறும் பழந்தமிழ் இலக்கணம்.[10] அப்படி எழுதப் பெறுவதே உண்மைக் கவிதை; எழுதுவோரே உண்மைக் கவிஞர்கள்.

...

10 தொல்காப்பியம், 1494 நூற்பா.

வள்ளுவர் காட்டும் சொல்—அணி

வித்துவான் ஆ. பாலன், தமிழாசிரியர், உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி.

'வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்—
தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதால்'' – என்பர் ஆன்றோர். அத்தகையத் திருக்குறளில் 'அணி' எனும் சொல் நின்றுணர்த்தும் பொருளாழத்தைக் கண்டுணர்தலே இக் கட்டுரையின் நோக்கம். நாட்டிற்கு அணி, நன்மங்கையர்க்கு அணி, சான்றோர்க்கு அணி, உலகிற்கு அணி என பலவித அணிகளைக் கூறிச் சென்றார் வள்ளுவர். அணியெனும் சொல்லிற்கு—அழகு, அணிகலன், அலங்காரம், அச்சாணி, அடுக்கு, அண்மை, அன்பு, எல்லை, ஏர்ச்சீர், வரிசை, ஒழுங்கு, செய்யுளணி, படைவகுப்பு. பூமாலை, ஒழுங்கு, ஓரிலக்கணம், ஒப்பு, ஓர் உவமஉருபு எனப் பல பொருள் கூறுவர். அணி யென்னும் சொல்லினைக் கையாண்டு வள்ளுவர் உணர்த்தும் கருத்தினைக் காண்போம்.

நாட்டிற்கு அணி இவையென்பார்:—

''பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து'' (738) என மொழிந்தார்.

(இ-ள்) பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ்வைந்து—நோயின்மையுஞ், செல்வம், விளைதல், இன்பம், காவலென்றிவையுடைமையுமாகிய இவ்வைந்தினையும்—நாட்டிற்கு அணி என்ப—நாட்டிற்கழகு என்று சொல்லுவர் நூலோர் எ-று.. இத்தன்மைகளைப் பெற்றிருத்தலே ஒரு நாட்டிற்கு மிகச் சிறந்த அழகாகும். இவைகளுள் ஒன்றேனும் குறையுடையதாய் அமையின் அந்நாட்டிற்குத் துன்பமும் தொல்லையும் தோன்றிவிடும். அவ்விடுக்கணிலிருந்து விடுபட்டு நாட்டைப் பாதுகாத்தலை மேற்கொள்வார், இவ்வைந்தினையும் காத்தலில் நாட்டம்கொண்டு வேண்டுவன செய்தல் வேண்டும்.

சான்றோர்க்கு அணி பலவுண்டெனினும், நடுவு நிலைமையும், நாணுடைமையுமே மிகச் சிறந்தது என்பார். அணி என்னும் சொல்லினை அவற்றின்கண் பயன்படுத்தி 'நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கணி' எனவும், 'ஒருபாற்

கோடாமை சான்ரோர்க்கணி' எனவும், 'சான்ரோர்க்கு அணியன்ரே நாணுடைமை' எனவும் ஓதினர். சான்ரோர்க்குப் பெருமை நிறைந்த பல குணங்கள் இருப்பினும், நடுவு நிலைமை தவறி ஒன்றை மேற்கொள்ளின் அவற்ருல் அவர் பெருமைகளெல்லாம் அழிந்துவிடும். மேலும் தமக்கொவ்வாத செயல்களைச் செய்ய நாணமில்லாமற் போய்விடுமாயின், அவரைச் சான்ரோர் என்று எவரும் கூருர். ஆதலின் சான்ரோர்க்கு, நடுவுநிலைமையும் நாணுடைமையும் மிகமிக இன்றியமையாதது. தன்னிலை தவருது நடுநின்று ஆய்ந்து செயல் செய்தல் பெருமைக் குணங்கள் பலவும் நிறைந்த சான்ரோர்க்கே இயலாமற் போய்விடுமாயின். உலகில் பழியும் பாவமும் பரந்து நிற்கும். பொய்நிலைச் செயல்கள், மெய் நிலைச்செயல்களாய் வேரூன்றிவிடும் அந்நிலை மாறவேண்டு மெனில் சான்ரோர் எனப்படுவார் நடுவுநிலைமை தவருமல் இருத்தல் இன்றியமையாததாகலின்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்ரோர்க் கணி" (118) என்றியம்பினர்.

(இ-ள்) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்—முன்னே தான் சமனுக நின்று பின் தன் கண்வைத்த பாரத்தை வரையறுக்குந் துலாம்போல; அமைந்து ஒருபாற் கோடாமை சான்ரோர்க்கு அணி-இலக்கணங்களாயமைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்ரோர்க்கு அழகாம் எ—று.

ஒருவர் தமக்குச் செய்த நன்றியை யறிந்து அவர்க்குச் செய்ந்நன்றியறிதலையுடையராய், கண்ணேட்டமுடையவராய் இருத்தல்வேண்டும். ஆதலின் அவர்க்கு ஏற்படும் இழுக்கினைப் போக்க, நடுவுநிலைமை தவறிச் செயல்செய்ய முற்படுதல் நன்றன்று. ஏனெனில் அவர்க்குண்டாகும் தீமைகள் முற்பிறவியிலேயே, முன்னரே விதிக்கப்பட்டுள்ளன.

"தீதும்நன்றும் பிறர்தரவாரா—நோதலும் தணிதலும் அவற்ரோரன்ன" என்று ஆன்ரோர் கூறுவர். ஆதலின் தம்மால் ஒருவற்குக் கெடுதலும், பெருக்கமும் உண்டாவதில்லை என்பதை எண்ணி எக்காரணத்தை முன்னிட்டும் நடுவு நிலை தவருது இருத்தலை நெஞ்சத்தில் கொள்ளவேண்டு மென்பார்.

"கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி" (115) என அறிவுறுத்தினர்.

(இ-ள்):— கேடும் பெருக்கமும் இல்அல்ல—தீவினையாற் கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி—அவ்வாற்றை யறிந்து அவை காரணமாக மனத்தின்கட் கோடாமையே அறிவானமைந்தார்க்கு அழகாவது (எ—று.)

மாந்தர் சிறப்புடையராய் இருத்தற்குரிய சிறப்பாக அமைவது நாணுடைமையே தமக்குப் பொருந்தாச் செயல்களைச் செய்ய நாணுதல் எல்லார்க்கும் ஏற்றதாயினும் சால்பு, பண்பு முதலிய குணங்களால் உயர்ந்தோர்க்கு நாணம் இல்லையாயின் அக்குணங்கள் இருப்பதால் எப்பயனும் இல்லை. ஆதலின் உடலுள் அமைந்திருக்கும் உள்ளத்தில், என்றும் நீங்கா அணிகலனாக நாணுடைமையை அணிதல்வேண்டும். அங்ஙனமணிந்திருப்பின் பீடுநடையராய், பெருமித நோக்கராய் நடந்து செல்வர். அவ்வாறில்லையாயின் பிணிகொண்ட நடையராய், வாடியமுகத்தராய், உடல், உள்ளச் சோர்வுடையராய் உலவிடுவர். அவ்வாறு அவர் உலவிடின் வரும் பயன் யாது? தீமையன்றி வேறில்லை. ஆதலின் நாணுடைமை சான்றோர்க்கு அணியென்பார்.

"அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை" (1014) என நவின்றார்.

(இ-ள்) சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றே—சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்; அஃது இன்றேல் பீடுநடை பிணியன்றே—அவ்வாபரணமில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம் எ-று.

உலகிற்கு அணி இவர் என்பார்:

'கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி" (701) என்றார்.

(இ-ள்) குறிப்புக் கூறாமை நோக்கி அறிவான்—அரசனுற் குறித்த கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன் முகத்தானுங் கண்ணானுநோக்கியறியு மமைச்சன் எஞ்ஞான்றும் மாறாநீர்வையக்கு அணி—எஞ்ஞான்றும் வற்றாத நீராற் சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓராபரணமாம் எ—று. (தொடரும்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

[1860 ஆம் ஆண்டு XXI சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது]

தமிழ் மொழியின் தனிமை, தொன்மை, எளிமை ஆய சிறப்புக்களை இந்நாடும் பிறநாடும் அறிந்து போற்றவும், தமிழ் நாடும் தமிழரும் சிறப்பாகத் தமக்குரிய பண்பாடு நாகரிகம் முதலிய பல்வகைத் துறைகளிற் பாரினிற் சிறக்கவும், பொதுவாக ஒல்லும் வகையில் உலகநலம் பேணவும், தமிழ்த்தாயின் தண்ணருளால் 1911 மே 14ஆம் நாள் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது.

நம் சங்கம் தமிழ் நலம் பேணும் தகுதிவாய்ந்த மொழித்துறை அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தும், கட்டுரை வரையச்செய்தும், "தமிழ்ப் பொழில்" என்னும் திங்கள் வெளியீட்டைத் தோற்றுவித்து அதனைப் பேணிப் புரந்தும் வருகின்றது.

தமிழ்நாட்டுத் திக்கற்ற பிள்ளைகள் சிலருக்கு ஒல்லுமளவிற்கு உண்டியும் உறையுளும் வழங்கிச் சிற்றுயிர்க் குற்ற துணையாம் கல்வியையும், உயிரினும் சிறந்ததாய ஒழுக்கத்தையும் அடையத் திக்கற்ற மாணவரில்லம் நிறுவித் தொண்டாற்றி வருகின்றது.

மேலும், 1916-ஆம் ஆண்டில், சங்கம் நிறுவிய துங்கன் திரு. வே. இராதாகிருட்டினப்பிள்ளையவர்கள் பேரால் ஒரு தொடக்கப்பள்ளியையும், 1938-ஆம் ஆண்டு சங்க வெள்ளிவிழா நாளில் கரந்தைப் புலவர் கல்லூரியையும் 1944-ஆம் ஆண்டில், தமிழைத் தம் உயிராகக்கொண்டு தமிழ் நலம் பேணிய தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் பேரால் உயர்நிலைப் பள்ளியையும் நிறுவித் தொண்டுசெய்து வருகின்றது.

பத்தாயிரக்கணக்கான தமிழ், ஆங்கில, பிறமொழி நூல்களைக் கொண்டு நூல் நிலையத்துடன் ஒரு படிப்பகமும் நடத்தி வருகிறது.

சங்கம் மேற்கொண்ட இப்பணிகள் பல்லாற்றானும் சிறக்க அன்பர்கள் உதவிசெய்ய வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில்

இத் திங்களிதழினை எல்லாப் பொது நூலகங்களும் பயன்படுத்தலாமென சென்னைப் பொது நூலக இயக்குநரின் 8—1—57-ம் நாளைய R. C. 232 J 1/56 எண் உத்தரவில் மாவட்ட நூலக அதிகாரக் குழுவினர்க்கும், அவர்கள் வழி நகராட்சி, மாவட்டக் கழகங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (Proceedings R. O. C. No. 232 J 1/56 dated 8—1—57 of the Director of Public Libraries, Madras)

நூலகங்கள் நடத்திவரும் திருக்கோயில்களின் மேலதிகாரிகள், அவைகளின் நிதி நிலைமை இடந்தருமாயின், "தமிழ்ப் பொழில்" இதழ்க்கு உறுப்பினராகலாமென, சென்னை இந்து சமய, அறநிலைய மாநில ஆணையர் 7—11—56ம் நாளைய L. Dis 29226/56 எண் உத்தரவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. L. Dis. 29226/56 dated 7—11—56 of the Commissioner for Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

Regd. No. M 8474

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

தொல்–சொல்—தெய்வச்சிலையார் உரை ...	2—50
நெல்லை வருக்கக் கோவை ...	0—12
சித்தரந்தாதி ...	0—12
சுருதி வீணை ...	0—25
தமிழரசி குறவஞ்சி ...	0—62
பரத சாத்திரம் ...	1—00
கவியரசு நினைவு மலர் ...	1—00
சிவமும் செந்தமிழும் ...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க்காண்டம் ...	0—50
Garland of Tamil Poetry ...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்) ...	0—50
அப்பர் புகழ்மாலை ...	0—25
சுந்தரர் புகழ்மாலை ...	0—25
பாரதசார வெண்பா ...	1—00
தொல்–பொதுப்பாயிரம் உரை ..	0—12
யவன மஞ்சரி (த. இராமநாதபிள்ளை B.A., யாழ்ப்பாணம்)	1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B.A.,)	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாதபிள்ளை)	0—25
கரந்தைக் கட்டுரைக் கோவை ...	1—75
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு ...	6—00

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கப்பெறும் நன்கொடைகள் வருமான வரிச் சட்ட பிரிவு 15-Bயின்படி வருமான வரிவிதிப்பிலிருந்து விலக்கப்பெற்றிருக்கின்றனவென்று சென்னை வருமானவரிக் கமிஷனர் அவர்கள் தமது 13—9—60-ஆம் நாளைய சி. நெ. 212 (27) 58 உத்தரவில் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம் மலேயா, இலங்கை முதலிய

	உள் நாடு.	வெளிநாடுகள்.
ஆண்டு வரி	5—00	6—00

ஆசிரியரும், வெளியிடுபவரும் — செ. தனக்கோடி B. A., தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்; அச்சிடுபவர் திரு. N. சின்னையா (திரு. T. V. M. மகாலிங்கம் அவர்களுக்காக) மகாலிங்கம் அச்சகம், 1321 தெற்கலங்கம், தஞ்சாவூர்.